http://epaper.dinamani.com/333126/Kadir/07-09-2014#page/14/2

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
http://www.dinamani.com

தினமணி

ஞாயிற்றுக்கிழமை
7 செப்டம்பர் 2014
சென்னை
24 பக்கங்கள் ரூ. 5






# மருத்துவ ஆராய்ச்சிக்காக விருது!

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தைச் சேர்ந்த டாக்டர் வி.டி.ஸ்ரீராம், சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில் எம்.பி.பி.எஸ். படித்தவர். மாலத்தீவில் அரசு மருத்துவமனையில் சுகாதார அதிகாரியாகத் அவரது பணியைத் தொடங்கிய இவர், மாலத்தீவின் சுகாதாரத் துறையின் சார்பில் சிறந்த மருத்துவர் என அவரது 23-ஆம் வயதில் தேர்வு செய்யப்பட்டார். அதன் பின்பு சென்னை மருத்துவக் கல்லூரியில் எம்.டி.(மருந்தியல்) பட்டம் பெற்றார். மருத்துவத் துறையில் நுழையும்போதே ஆராய்ச்சித் துறையில் கால் பதிக்க வேண்டும் என்று நோக்கம் கொண்டவர்.

எனவே சென்னையில் 'ஆரோஸ் ஹெல்த் கேர்' ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தைத் தொடங்கி, பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருகிறார். செட்டிநாடு பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் ஆலோசகர், அண்ணா பல்கலைக்கழக வாழ்க்கை அறிவியல் ஆய்வு மையத்தின் மருத்துவ இயக்குநர் என பல்வேறு முகங்கள் இவருக்கு உண்டு.

நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், மருத்துவ இயக்குநர், நோயாளிகளுக்கு மருத்துவம் என பல வேலைகளில் மூழ்கியிருந்தவரை ஒரு மாலைப் பொழுதில் சந்தித்தோம். இனி அவருடனான சந்திப்பிலிருந்து...

"**2008**-ஆம் ஆண்டு குறைவான முதலீட்டுடன் சிலர் மட்டுமே சேர்ந்து இந்த நிறுவனத்தைத் தொடங்கினோம். இதுவரை மருந்துகள், அழகியல் சாதனங்கள், சித்த மருத்துவ, ஆயுர்வேத மருத்துவ மருந்துகள் உள்ளிட்ட 760 மருத்துவப் பொருள்களின் மீது ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

ஒரு மருந்துப் பொருள் சந்தையை அடைவதற்கு முன்பாக நான்கு வழிகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும். முதலில் மூலக்கூறுகள் நோய்க்கான காரணிகளைக் கொண்டு கணினி மூலம் ஆய்வு செய்யப்படும். அதன் பின்பு ஆய்வுக்கூட ஆராய்ச்சி, மூன்றாவதாக விலங்குகள் மூலம் ஆய்வு செய்யப்படும். ஒரு மருந்து பிராணிகளின் உடலில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்துகிறதோ அதில் 70 முதல் 90 சதவிதம் மனித உடலோடு ஒத்துப்போகும். அதனால்தான் மனிதர்களுக்கு மருந்தைச் செலுத்தி ஆய்வு மேற்கொள்வதற்கு முன்பாக விலங்குகளிடத்தில் செலுத்தப்படுகிறது.

இறுதிக் கட்டமாக மனிதர்களுக்கு அந்த மருந்துகளைச் செலுத்தி ஆய்வு மேற்கொள்ளப்படும். ஒரு மருந்து நிறுவனம் குறிப்பிட்ட ஒரு மருந்துப் பொருளை தயாரித்து, அதனை சந்தைப்படுத்துவதற்கு முன்னதாக ஆராய்ச்சி நிறுவனங்களிடம் ஆய்வு மேற்கொள்ள கொடுப்பார்கள். அவர்கள் ஆய்வு மேற்கொண்டு சான்றளிப்பார்கள். அதன் பின்பு குறிப்பிட்ட அந்த மருந்துகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சில் அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படும் மருந்துகளையே மருத்துவர்கள் நோயாளிகளுக்குப் பரிந்துரைப்பார்கள்.

எங்கள் நிறுவனத்தைப் பொறுத்தவரை ஒரு புதிய மருந்தைக் கண்டுபிடிப்பது, அதனை மேம்படுத்துவது, சந்தைப்படுத்துவதற்கு முன்பாக ஆய்வு செய்வது என அனைத்து வகையான ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகிறோம். நமது நாட்டைப் பொறுத்தவரை, இது போன்ற ஆய்வுகளுக்கான நிறுவனங்கள் மிகவும் குறைவு. வெளிநாட்டு நிறுவனங்கள் இந்த ஆய்வுகளை மேற்கொண்டால், அதற்கான செலவு மிகவும் அதிகம். அவ்வாறு அதிக செலவில் ஆய்வு மேற்கொண்டால் குறிப்பிட்ட மருந்துகளின் விலையும் அதிகரிக்கும்.

அதே ஆய்வை நம் நாட்டிலேயே மேற்கொள்ளும்போது வெளிநாடுகளுக்கு வழங்கும் நிதியிலிருந்து 20 சதவிதத்திலேயே அதனைச் செய்து முடிக்க முடியும். அதன் மூலம் நம் நாட்டு மக்களுக்குத் தரமான மருந்துகளை, குறைந்த விலையில் கொடுக்க முடியும். எங்கள் நிறுவனத்தில் 20 ஊழியர்கள் நேரடியாகப் பணியாற்றுகின்றனர். மறைமுகமாக நூற்றுக்கும் அதிகமானோர் பணியாற்றி வருகின்றனர்.

ஹெபடைடிஸ் சி என்ற கொடிய வைரஸ் தாக்குதலுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். முழுவதுமாக குணப்படுத்த இயலாது என்று கூறப்படும் ஆஸ்துமாவிற்கும் நிரந்தரத் தீர்வு காண வேண்டும் போன்ற இலக்குகளோடு போராடிக் கொண்டிருக்கிறேன்" என்றார் வி.டி. ஸ்ரீராம்.

அதற்கு ஒரு சான்றுதான் தில்லியில் உள்ள அகில இந்திய சாதனையாளர்கள் அறக்கட்டளையின் சார்பில் தேசிய வளர்ச்சிக்கான சிறந்த பங்களிப்பை அளித்தவர்களுக்காக வழங்கப்பட்ட விருது. மருத்துவ ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவதற்கான இந்த விருதை அண்மையில் இவர் பெற்றுள்ளார். என்.டி.டி.வி. பிராஃபிட் நிறுவனத்தின் சார்பில் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் சென்னையின் சிறந்த நிறுவனம் என்ற விருதையும் இந்த நிறுவனம் பெற்றுள்ளது.

சந்திப்பு: **ஜெனி ஃப்ரீடா**

படங்கள்: ஆர்.ராதாகிருஷ்ணன்


வி.டி. ஸ்ரீராம்



http://epaper.dinamani.com/333126/Kadir/07-09-2014#page/14/2